# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2025.10.01 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகம்

**உயர்தொழிலர் நியமங்களை பேணுவதற்கும் நிறுவகத்தின் உறுப்பினர்களின் ஒழுக்காற்றுக்கும் பொறுப்பாக இருக்க வேண்டிய இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள்நிறுவகத்தைதாபிப்பதற்கும்;நிலையானசொத்துஉயர்தொழில் தொடர்பிலான பொதுமக்களின் அக்கறையை பாதுகாத்து ஊக்குவிப்பதற்கும்; மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 144.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

# இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகம்

ச.வ.- ஒ 4/2024

**உயர்தொழிலர் நியமங்களை பேணுவதற்கும் நிறுவகத்தின் உறுப்பினர்களின் ஒழுக்காற்றுக்கும் பொறுப்பாக இருக்க வேண்டிய இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகத்தை தாபிப்பதற்கும்; நிலையான சொத்து உயர்தொழில் தொடர்பிலான பொதுமக்களின் அக்கறையை பாதுகாத்து ஊக்குவிப்பதற்கும்; மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

“நிலையான சொத்து மற்றும் மதிப்பீட்டு நிறுவகம்” என முன்னுரை
அழைக்கப்பட்டு அறியப்படும் நிறுவகமொன்று அதன் அமைப்பு புற விதிகள் மற்றும் அமைப்பகவிதிகளுக்கிணங்க அதன் குறிக்கோள்களை பயனுறுவகையில் நிறைவேற்றும் மற்றும் சொல்லப்பட்ட நிறுவகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இதுகாலவரை பதிவுசெய்யப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட குறிக் கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக சொல்லப்பட்ட நிறுவகம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் கூட்டிணைக்கப்பட்டுள்ளதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொண்டு நடாத்தியுள்ளதாதலாலும் மற்றும் “இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகம்” எனும் பெயரில் பாராளுமன்ற சட்டமொன்றின்மூலம் தாபிக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும்:

அத்துடன், பாராளுமன்ற சட்டமொன்றின்மூலம் இலங்கை, நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகத்தை தாபிப்பதற்கு, 2023, ஒக்டோபர் 23 ஆந்தேதிய அமைச்சரவை முடிபின் மூலம் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

PL 15426- 470 (2025/08)

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கை நிலையான சொத்து உயர் தொழிலர் நிறுவகத்தை தாபித்தல்

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகம் என அழைக்கப்படவேண்டிய நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகமானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்டிருத்தலும் வேண்டும் அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் வழக்குத்தொடரவும்படலாம்.

(3) இச்சட்டத்தின் தொடக்க தேதியிலிருந்தும் அதன் பின்னரும், நிலையான சொத்து மற்றும் பெறுமான மதிப்பீட்டு நிறுவகத்தின் அத்தகைய மற்றும் அத்தகைய எண்ணிக்கையிலான ஆட்கள் தற்போதைய என்றவாறான சக உறுப்பினர்கள் மற்றும் இணை உறுப்பினர்கள் இதனகத்துப்பின்னர், இதன்மூலம் அமைத்துருவாக்கப்பட்ட நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள் என்றவாறாக சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

நிறுவகத்தின் குறிக்கோள்கள்

**3.** பின்வருவன நிறுவகத்தின் குறிக்கோள்களாதல் வேண்டும்-

(அ) இலங்கையில் நிலையான சொத்து உயர் தொழிலர்களின் கௌரவம் மற்றும் நற்பெயரை உயர்த்துதலும் போற்றிக்காத்தலும்;

(ஆ) பின்வருவன உள்ளடங்கலாக, இலங்கையில் நிலையான சொத்து கைத்தொழில் தொடர்பான கோட்பாடுகள், நுட்பங்கள், நியமங்கள் மற்றும் செயன்முறைகளை மேம்படுத்தலும் விருத்திசெய்தலும்-

(i) இலங்கையில் காணியினதும் ஆதனங்களினதும் உயரிய மற்றும் மிகச்சிறந்த பயன்பாட்டை கொண்டுவருவதற்கு நிலையான சொத்துக் கருத்திட்டங்களின்

நிலையான சொத்து திட்டமிடல், முதலீடு, அபிவிருத்தி, முகாமை, மேற்பார்வை, கண்காணிப்பு, கணிப்பீடு மற்றும் மதிப்பீடுசெய்தல் தொடர்பான எல்லாத் தொழில்கள்;

(ii) காணி மற்றும் ஆதனங்களின் விற்பனை, வாங்கல், சந்தைப்படுத்தல், தரகுத்தொழில் செய்தல், ஏலவிற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் அல்லது வாடகைக்கு விடுதல் மற்றும் அதன்கண்ணுள்ள அக்கறைகள்;

(iii) எல்லா வகையினதுமான நில ஆதனம், பொருத்திகள், இணைப்புக்கள், சாதனங்கள், பொறித்தொகுதி மற்றும் இயந்திரத்தொகுதிகளின் நிலையான சொத்து திட்டமிடல், முதலீடு, அபிவிருத்தி, சொத்து முகாமைத்துவம் மற்றும் கணிப்பீடுமீதான சேவையொன்று மற்றும் அதன்கண்ணுள்ள அக்கறைகள் தேவைப்படும்போது, பகிரங்க, மற்றும் தனியார் துறை, வேறேதேனும் முகவராண்மை அல்லது தனியாளுக்கு உயர்தொழிலர் அபிப்பிராயம் மற்றும் அத்தகைய மதியுரை சேவைகளை வழங்கல் மற்றும் மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்கள்மீது நடுத்தீர்ப்பாளரொருவராக செயலாற்றல்;

(iv) அமைத்துருவாக்கத்திற்காகவும் முகாமைத் துவத்திற்காகவும் அத்துடன் நிலையான சொத்து முகவராண்மை மற்றும் தரகுத்தொழில் செயன்முறையில் ஈடுபட்டுள்ளோருக்காகவும் நிலையான சொத்து முதலீட்டு நம்பிக்கை பொறுப்புக்கான உயர்தொழிலர் சேவைகளை வழங்குதல்;

(v) ஏற்புடையற்பாலனவான எழுத்திலான சட்டத்திற்கமைவாக நிலையான சொத்து திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நோக்கில் சூழல் தாக்கம், நீர் மற்றும் காற்றுரிமைகள்,

சுரங்கங்கள் மற்றும் கனியங்கள், உயிரியல் சொத்துக்கள் மற்றும் மரபுரிமை ஆதனங்களின் கணிப்பீடு;

(இ) நாட்டின் சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்விற்காக காணி மற்றும் இணை வளங்களின் சூழல் நட்பு பயன்பாட்டை பாதுகாத்தல்;

(ஈ) நிலையான சொத்து உயர்தொழிலின் நியமங்கள், தொழிலாண்மைத்துவம் மற்றும் நற்பெயரை உயர்த்துதலும் போற்றிக்காத்தலும் அத்துடன் உயர்தொழிலின் பயனுறுதன்மையை பேணுதலும் மேம்படுத்தலும்;

(உ) உயர்தொழில் தொடர்பான உறுப்பினர்களின் அக்கறைகள், அந்தஸ்துகள், நல்வாழ்வு, உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளையும் மக்களின் அக்கறைகளையும் கூட்டிணைத்தலும் மேம்படுத்துதலும்;

(ஊ) மிகச்சிறந்த செயற்றிறன் மிக்க கோட்பாடுகள், தொழிநுட்பங்கள், நியமங்கள் மற்றும் செயன்முறைகளை கடைப்பிடித்தலை உறுதிப்படுத்துவதற்கு பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட நிலையான சொத்து பணிகள் மீதான இற்றைவரையான அறிவு மற்றும் தகவலை எய்துவதிலும் பரிமாற்றத்திலும் உதவுதல்;

(எ) நிலையான சொத்துக் கைத்தொழில், சொத்து முகாமைத்துவ கருவிகள் தொடர்பான இயைபான தரவு வங்கிகளையும் ஆதன சுட்டிகளையும் விருத்திசெய்தலும் பேணுதலும் அத்துடன் நிலையான சொத்துசார் சொத்துக்களின் மிகச்சிறந்த பயன்பாட்டிற்காக பகிரங்க மற்றும் தனியார் நிறுவனங்களை வசதியளிப்பதற்கு அத்தகைய தகவல்களை வழங்குதல்;

(ஏ) நிலையான சொத்து மற்றும் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட அதன் கணிப்பீடுகள் தொடர்பான கருமங்கள், செயற்பாடுகள் மற்றும் செயன்முறைகளில் ஈடுபடுகின்ற ஆட்களின்

தகுதியை மதிப்பிடுவதற்கு நிறுவகத்தின் உறுப்பாண்மைக்காக தகைமையளிக்கும் பரீட்சைகளை நடாத்துதலும் தகுதிச் சான்றிதழ்களை அளித்தலும்;

(ஐ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக மற்றும் உயர்தொழிலர் அக்கறைகளின் செயற்பாடுகள் மீதான வெளியீடு களுக்காக வள நிலையமொன்றை தாபித்து முகாமைத்துவம் செய்வதனால் அதன்மீதான புத்தாக்கங்கள் மற்றும் கலந்துரையாடல்களை கவனத்திற்கொண்டு தொழிநுட்ப அறிவினைப் பெறுதலில் மற்றும் பரிமாற்றத்தில் உதவுதல்; அத்துடன்

(ஒ) நிலையான சொத்து அபிவிருத்தி, முகாமைத்துவம் மற்றும் கணிப்பீட்டின்மீதான பகிரங்க உறுப்பினர்களுக்கு அல்லது தனியார் நிறுவனங்களுக்கு அல்லது எவரேனும் அக்கறையுள்ள தனியாளுக்கு தகைமையை கட்டியெழுப்பும் வசதிகளை முனைதல்.

நிறுவகத்தின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்

**4.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, நிறுவகத்தின் சார்பில் பேரவையினால் பிரயோகிக்கப்படவேண்டிய, புரியப்படவேண்டிய மற்றும் நிறைவேற்றப்படவேண்டிய பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை நிறுவகம் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைகளையும் தகைமையீனங்களையும் மற்றும் நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கான உயர்தொழில்சார் நடத்தை நியமங்களையும் விதித்துரைத்தலும் அதன் பேணுகையை உறுதிப்படுத்தலும்;

(ஆ) நிலையான சொத்து பற்றிய அலுவல்களை கையாளுகின்ற உள்நாட்டு அல்லது சர்வதேச உயர்தொழில்சார் ஒழுங்கமைப்புக்களையும் நிலையான சொத்து பற்றிய அலுவல்கள் மீதான கல்விசார் மற்றும் ஆராய்ச்சி பணியில் ஈடுபட்டுள்ள கல்விசார் நிறுவனங்களையும் ஏற்றுக்கொள்ளல்;

(இ) நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலுக்கு, புரிதலுக்கு மற்றும் நிறைவேற்றுதலுக்கு அவசியமானவாறாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இரண்டினதும் அரசாங்க ஒழுங்கமைப்புக்களுடன் கம்பெனி களுடன், நிறுவனங்களுடன் அல்லது ஆட்களுடன் ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கைகளை செய்தலும் அத்துடன் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது நிறுவகத்தினால் அதன்சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் ஊடாகவாயினுஞ்சரி அத்தகைய ஒப்பந்தங்களையும் அல்லது உடன் படிக்கைகளையும் புரிதல் அல்லது கொண்டு நடாத்துதலும்;

(ஈ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வெளி நாட்டிலாயினுஞ்சரி, நிறுவகத்துக்கு ஒத்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற வேறு ஆட்கள் மற்றும் ஒழுங்கமைப்புகளிலிருந்து கூட்டுழைப்புடன் செயலாற்றுதலும் உதவுதலும் மற்றும் அவர்களிடமிருந்து உதவியை பெறுதலும்;

(உ) நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதில் இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலாயினுஞ்சரி, தொடர்புபட்ட வேறு நிறுவனங்களை பேணுதலும் அவற்றுடன் ஒருங்கிணைந்து வேலை செய்தலும் மற்றும் இணைதலும்;

(ஊ) நிறுவகத்தின் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்பனை செய்தல் மற்றும் பரிமாற்றுதல் அல்லது வேறுவகையாக கையுதிர்த்தல்;

(எ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கொடையாளிகளிடமிருந்து பணமாகவாயினுஞ் சரி அல்லது பொருட்களிலாயினுஞ்சரி மானியக் கொடைகளையும், கொடைகளையும், நன் கொடைகளையும், மானியங்களையும், அறக் கொடைகளையும் மற்றும் ஒப்பப்பணங்களையும் பெறுதல்;

(ஏ) உறுப்பாண்மை, உறுப்பாண்மைக்கான அனுமதி மற்றும் நிறுவகத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான கட்டணங்கள், ஒப்பப்பணங்கள் மற்றும் உதவுதொகைகளை விதித்தல்;

(ஐ) பேரவையால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, ஏதேனும் அரச வங்கியுடன் வங்கிக் கணக்குகள், சேமிப்புக்கள், வைப்புக்கள் மற்றும் பிணைப் பொறுப்புக்களை திறத்தலும் பேணுதலும்;

(ஒ) பேரவையினால் காலத்துக்குக்காலம் விதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறாக பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது நிறுவகத்தின் நோக்கத்துக்காக பணத்தை, முற்பணமாக பெறுதல், கடனாக கொடுத்தல் அல்லது கடனாக பெறுதல்;

(ஓ) பேரவையின் அங்கீகாரத்துடன் அதன் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக அவசியமானவாறாக அல்லது உசிதமானவாறாக அத்தகைய முறையில் அதன் நோக்கங்களுக்காக எவ்வாறான நிதிகள் உடனடியாகவன்றி தேவைப்படுமோ அவ்வாறான அதன் நிதிகளை முதலீடு செய்தல்;

(ஔ) நாணய மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிச்சீட்டுக்கள் மற்றும் வேறு கைமாறத்தகு அல்லது கைமாற்றத்தகு சாதனங்கள் அல்லது பிணைப்பொறுப்புக்களை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக்கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், வாங்குதலும், விற்பனை செய்தலும் அல்லது வழங்குதலும்; அத்துடன்

(க) நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக அல்லது எய்துவதற்காக அவசியமாகக்கூடியவாறான அல்லது அதன் இடைநேர்விளைவான அல்லது அதற்கு உகந்தனவாகவுள்ள அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்தல்.

நிறுவகத்தின் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பாண்மையின் தரநிலைப்படுத்தல்

**5.** (1) நிறுவகத்தின் உறுப்பினர்கள், கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களையும் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர் களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (அ) நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள், சக உறுப்பினர்களாக அல்லது உறுப்பினர்களாக தரநிலைப் படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) நிறுவகத்தின் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்கள் இணை உறுப்பினர்களாக, மாணவர்களாக மற்றும் கௌரவ உறுப்பினர்களாக தரநிலைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) எட்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, உறுப்பாண்மையின் ஒவ்வொரு தரத்திற்கும் தேவையான தகைமைகளையும் அனுபவங்களையும் இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் வாக்களிப்பதற்கு தகவுடையோராதல் வேண்டும் என்பதுடன் பேரவைக்கு அல்லது நிறுவகத்தின் ஏதேனும் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் நிறுவகத்தின் எல்லா உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதலும் வேண்டும்.

(5) கூட்டிணைக்கப்படாத உறுப்பினர் ஒவ்வொருவரும் அழைப்பு விடுப்பதன்மேல், நிறுவகத்தின் கூட்டங்களிற்கு சமுகமளிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் வாக்களிப்பதற்கான உரிமையை கொண்டிருத்தலாகாது.

நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான விண்ணப்பம்

**6.** (1) இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட தகைமைகளையும் அனுபவத்தையும் திருப்தி செய்கின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக அத்தகைய படிவத்திலும் முறையிலும் நிறுவகத்தின் உறுப்பாண்மைக்காக விண்ணப்பிக்கலாம்.

(2) எட்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றை செய்கின்ற ஆளொருவர், விதிகளினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறாக உறுப்பாண்மைக் கட்டணத்தின் கொடுப்பனவின்மீதும் பேரவையின் அங்கீகாரத்துக்கு அமைவாகவும் நிறுவகத்தின் உறுப்பினர்களாக சேர்ப்பு செய்யப்படலாம்.

**7.** (1) எட்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, உறுப்பினரொருவரின் உறுப்பாண்மைக் காலப்பகுதி பஞ்சாங்க ஆண்டொன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன் புதுப்பிக்கத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

உறுப்பாண்மையின் காலப்பகுதி மற்றும் உறுப்பாண்மை யினைப் புதுப்பித்தல்

(2) உறுப்பாண்மையை புதுப்பிக்க உட்கருதுகின்ற எவரேனும் உறுப்பினர், உறுப்பாண்மை காலாவதியாவதற்கு முப்பது நாட்களுக்கு குறைவாக அல்லாத நாட்களுக்கு முன்னர் புதுப்பித்தலுக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) உறுப்பாண்மையானது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக புதுப்பித்தல் கட்டணக் கொடுப்பனவின்மீது புதுப்பிக்கப்படலாம்.

**8.** (1) ஆளொருவர் பின்வருமாறு இருந்திருப்பின் அல்லது இருப்பின், அத்தகைய ஆள் பேரவையின் அல்லது நிறுவகத்தின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும்:-

உறுப்பினராக இருப்பதற்கான தகைமை யீனங்கள், நிரலிலிருந்து அகற்றுதல், ஒழுக்காற்று தத்துவங்களும் நடைமுறைகளும்

(அ) இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராக காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால்;

(ஆ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிமன்றமொன்றினால் கடனிறுக்கவகையற்ற ஒருவராக இருந்தால் அல்லது தீர்ப்பளிக்கப் பட்டால்;

(இ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்திருந்தால் அல்லது அனுபவித்துக் கொண்டிருந்தால்; அல்லது

(ஈ) பதினெட்டாம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவை அல்லது குழுவொன்றிலான விசாரணையொன்றின் பின்னர் உயர்தொழில்சார் துர்நடத்தைக்கு குற்றப்பொறுப்புடையவராக கண்டறியப்பட்டால்.

(2) பேரவையானது நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும்

ஏதேனும் தகைமையீனத்திற்கு உட்பட்டவராக வரின், அவரை நிரலிலிருந்து அகற்றுவதற்கானக் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், பேரவை நிரலிலிருந்து அகற்றுவதற்கு பதிலாக பேரவை தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு உறுப்பாண்மையிலிருந்து அத்தகைய ஆளை இடைநிறுத்தலாம்:

ஆயின், மேலும், நிரலிலிருந்து அகற்றலானது, நிரலில் சேர்க்கப்படுவதற்கு அத்தகைய ஆள் தகவுடையவராவார் எனத் திருப்திப்படின், அவரை அடுத்துறும் நிரலில் சேர்ப்பதிலிருந்து பேரவையை தடுத்தலாகாது.

(3) நிறுவகத்தின் உறுப்பினர் எவரும், அத்தகைய உறுப்பினர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பேரவையின் உறுப்பினரொருவராக இருப்பதற்கு தகுதியீனமற்றவராக வந்துள்ளார் என்றும் உயர்தொழில்சார் துர்நடத்தையைப் புரிந்துள்ளார் என்றும் விசாரணையின் பின்னர் பேரவைக்கு அறிக்கையொன்று, 18 ஆம் பிரிவின்கீழான பேரவையால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்று குழுவொன்றினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலொழிய, நிரலிலிருந்து அகற்றப்படுதலோ அல்லது உறுப்பாண்மையிலிருந்து இடைநிறுத்தப்படுதலோ ஆகாது.

(4) இப்பிரிவின்கீழான நிரலிலிருந்து அகற்றப்பட்ட அல்லது உறுப்பாண்மையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட எவரேனும் ஆள், மீள் அமர்த்தலுக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன் அத்தகைய ஆள் பேரவை தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்மீது பேரவையால் மீள் அமர்த்தப்படலாம்.

நிறுவகத்தின் பெயரைப் பயன்படுத்தல்

**9.** (1) நிறுவகத்தின் எவரேனும் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர் “இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகத்தின் உறுப்பினரொருவர்” என்ற பெயரை எடுப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் மற்றும் அவர் நிறுவகத்தின் சக உறுப்பினரொருவர் என்பதை சுட்டிக்காட்டுவதற்கு அவரின் பெயரின் பின்னால் “FIREPSL” என்ற சுருக்கீட்டை பயன்படுத்துவதற்கும் அவர் நிறுவகத்தின் உறுப்பினரொருவர் என்பதை சுட்டிக்காட்டுவதற்கு அவரின் பெயரின் பின்னால் “MIREPSL” என்ற சுருக்கீட்டை பயன்படுத்துவதற்கும் உரித்துடையோராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பெயர்களுக்கு மேலதிகமாக, கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினரொருவர், அத்தகைய உறுப்பினரின் தகவுதிறன், செயலாற்றுகை மற்றும் திறமானம் என்பவற்றின் அடைப்படையில் 18 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பாண்மைக் குழுவிலான மதிப்பீடொன்றின்மீதும் நிறுவகத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அங்கீகாரத்துக்கு அமைவாகவும் "பட்டயம்பெற்ற நிலையான சொத்து உயர்தொழிலர்" என்ற பெயர் பதவி அளிக்கப்படலாம்.

(3) நிலையான சொத்து அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ செயற்பாட்டை கொண்டுநடாத்தும் ஏதேனும் குழுமம், இச்சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறாக, அத்தகைய தேவைப்பாட்டுக்கமைய, நிறுவகத்தின் உறுப் பாண்மையை அளிப்பதற்கு கவனமெடுக்க நிறுவகத்தினை கோரலாம்:

ஆயின், எவ்வாறாயினும், நிறுவகத்தின் உறுப் பாண்மையை கோருகின்ற குழுமம், நிலையான சொத்துப் பணிகளை தொழிற்படுத்துவதற்கான சட்டரீதியான உரிமை களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய குழுமத்தின் பங்காளர்களாக ஆகக்குறைந்தது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட வேண்டு கோளொன்று, 18 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பாண்மைக் குழுவினால் கவனத்திற்கொள்ளப்படலாம் என்பதுடன் அதன் விதப்புரைகளுடன் நிறுவகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படலாம்.

(5) குழுமமொன்றின் பங்காளர்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களாக இருக்கின்றவிடத்து, பேரவை அத்தகைய குழுமத்தின் விவரணத்தின் பாகமாக "பட்டயம்பெற்ற நிலையான சொத்து உயர்தொழிலர்" என்ற பிரதான பெயரை எடுப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் அத்தகைய குழுமத்தை அனுமதிக்கலாம்.

(6) மேற்சொல்லப்பட்டவாறு தவிர, ஆள் எவரும் அல்லது ஆட்களின் குழு எதுவும் விடயத்திற்கேற்ப, "பட்டயம்பெற்ற நிலையான சொத்து உயர்தொழிலர்" என்ற பெயரையோ

“FIREPSL” என்ற சுருக்கீடுகளையோ எடுத்தலோ அல்லது பயன்படுத்துதலோ அல்லது ஆலோசனை குழுமமொன்றானவாறாக நிலையான சொத்து உயர்தொழிலர் செயற்பாட்டை கையாளுகின்ற ஏதேனும் புத்தகத்தில், நாளேட்டில் அல்லது வேறு ஏதேனும் வெளியீட்டில் ஒத்த பெயரை அல்லது பெயரின் பகுதியைப் பயன்படுத்தலோ ஆகாது.

(7) நிறுவகத்தினால் முனைவு செய்யப்பட்டிருந்தாலொழிய, உறுப்பினர் எவரும் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்ட ஏதேனும் பதவிப்பெயர் அல்லது சுருக்கீடுகளை எடுத்தலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.

உறுப்பினர்கள் இடாப்பு

**10.** (1) நிறுவகமானது, இச்சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு நேர் முற்போந்த நிறுவகத்தின் உறுப்பினர்களாகவிருந்த ஆள் ஒவ்வொருவரினதும் விபரங்கள் மற்றும் நிறுவகத்தின் உறுப்பினர்களாக இதனகத்துப்பின்னர் முறையாக அனுமதிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரினதும் விபரங்கள் உள்ளடங்கலாக, உறுப்பினர்களின் இடாப்பொன்றை வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) உறுப்பினர்களின் இடாப்பானது தனித்தனியான பாகங்களாக பிரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு பாகமும் இடாப்பானது எந்த உறுப்பாண்மையின் வெவ்வேறு தரம் தொடர்பானதோ அந்த உறுப்பாண்மையின் வெவ்வேறு தரம் தொடர்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தரத்தின் நிரலில் சேர்க்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும் தொடர்பு விபரங்களையும் மற்றும் தகைமைகளையும் அனுபவங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

நிறுவகத்தின் பேரவை

**11.** (1) நிறுவகத்தின் நிருவாகத்துக்கும் முகாமைக்கும் மற்றும் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் பொறுப்புடையதாக வேண்டிய (இச்சட்டத்தில் “பேரவை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிறுவகத்தின் பேரவை ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) பேரவையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) நிறுவகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களால் அவர்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படும் பேரவையின் தலைவர், பிரதித் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உதவிச் செயலாளர் என்ற அனைவரும்:

ஆயின், எவ்வாறாயினும், தலைவரும் பிரதித் தலைவரும் நிறுவகத்தின் சக உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்;

(ஆ) நேர்முற்போந்த ஆண்டில் பேரவையின் தலைவர் என்ற பதவியை வகித்த ஆள்; அத்துடன்

(இ) நிறுவகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பாண்மை வகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட ஏழு உறுப்பினர்கள்.

(3) நிறுவகத்தின் முதலாவது பேரவையானது, இச்சட்டம் தொடங்கிய தேதிக்கு முற்போந்த நாளில் பதவி வகிக்கின்ற நிறுவகத்தின் பேரவையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பேரவையின் உறுப்பினர்களின் பதவிக்காலம்

**12.** (1) பேரவையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் முன்னதாகவே பதவியை வறிதாக்கியிருந்தாலொழிய அல்லது பேரவையினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய நிறுவகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பேரவைக்கு புதிய உறுப்பினர்கள் தேர்வுசெய்யப்படும்வரை ஒரு வருட காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் தொடர்ச்சியாக இரண்டிற்கு மேற்படாத காலப்பகுதியொன்றிற்கு மீள் நியமனம் செய்வதற்கு தகுதியுடையோராதல் வேண்டும்.

(2) பேரவையின் உறுப்பினரொருவரின் இறப்பினால், பதவி விலகலினால் அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் பதவி வறிதாகின்றவிடத்து, நிறுவகத்தின் வேறு உறுப்பினர் 11 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை கவனத்திற்கொண்டு அத்தகைய உறுப்பினரின் இடத்திற்கு தேர்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) பேரவையின் உறுப்பினரொருவர், 18 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழுவினால் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்றின் மீது அத்தகைய

உறுப்பினர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருப்பதற்கான 8 ஆம் பிரிவின்கீழான தகைமையீனங்கள் உள்ளவராகவரின், பேரவையினால் பதவியிலிருந்து அகற்றப் படலாம்.

(4) பேரவையின் உறுப்பினர் ஒவ்வொருவரினதும் பதவி-

(அ) பேரவைக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அவரின் பதவியிலிருந்து விலகுவதன்மேல் அத்துடன் அத்தகைய பதவி விலகலானது பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல்;

(ஆ) பேரவையின் அனுமதியின்றி பேரவையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வராதிருப்பதன்மேல்;

(இ) நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருப்பதை நிறுத்துவதன்மேல்; அல்லது

(ஈ) அத்தகைய உறுப்பினர் 8 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏதுவின்மீது உறுப்பாண்மையிலிருந்து அகற்றப்பட்டதன் மேல் அல்லது இடைநிறுத்தப்பட்டதன்மேல்,

பதவி வறிதாதல் வேண்டும்.

(5) பதவி வறிதாக்கப்பட்ட உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக்கப்பட்ட பேரவையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் பதவி விலகல், இறத்தல் அல்லது வேறுவகையில் முன்னதாகவே பதவியை வறிதாக்கியிருந்தாலொழிய, அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும்.

பேரவையின் கூட்டங்கள்

**13.** (1) பேரவையின் கூட்டங்கள், ஒவ்வொரு மாதமும் குறைந்தது ஒரு தடவையாவது நடைபெறுதல் வேண்டும்.

(2) பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் பேரவையின் ஏழு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) பேரவையின் தலைவர், பேரவையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். தலைவர் சமுகமில்லாதபோது, பிரதி தலைவரும் அல்லது தலைவர்

மற்றும் பிரதிதலைவர் இருவரும் சமுகமில்லாதபோது சமுகமாயிருந்த உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் பேரவையின் அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்குதல் வேண்டும்.

(4) (அ) ஒவ்வொரு கூட்டத்திற்குமான அறிவித்தல், கூட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு ஏழு நாட்களுக்கு முன்னர் பேரவையின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய அறிவித்தல்-

(i) அத்தகைய கூட்டத்திற்கான தேதி, நேரம், இடம் என்பவற்றையும் கூட்டத்தில் எடுக் கப்படவேண்டிய அலுவல்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) உறுப்பினர் ஒவ்வொருவரினதும் கடை சியாக அறியப்பட்ட வதிவிட முகவரிக்கு தபால்மூலம் அல்லது அத்தகைய உறுப் பினர் ஒவ்வொருவரினதும் இலத்திர னியல் மின்னஞ்சல்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

(5) பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கு தலைமைதாங்கும் ஆள், சமுகமாயிருந்த பெரும்பான்மையான உறுப்பினர்களின் சம்மதத்துடன் கூட்டத்தை ஒத்திவைக்கலாம்.

(6) எட்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் எழும் ஏதேனும் பிரச்சினையானது சமுகமாயிருந்த உறுப்பினர்களின் பெரும்பான்மையான வாக்குமூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் சமமான வாக்குகள் உள்ள போது கூட்டத்தை தலைமை தாங்குகின்ற உறுப்பினர் அவருடைய சொந்த வாக்குக்கு மேலதிகமாக, அறுதியிடும் வாக்கொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

(7) நிறுவகத்தின் உறுப்பினரொருவர், பதவியிலுள்ள பேரவையின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மை யானவர்களால் பேரவையின் கூட்டமொன்றில் நிறைவேற்றப் பட்ட தீர்மானமொன்றின் மேலன்றி நிரலிலிருந்து அகற்றப் படுதலோ அல்லது இடைநிறுத்தப்படுதலோ ஆகாது.

(8) பேரவையானது, பேரவையின் ஒவ்வொரு கூட்டத் தினதும் நடவடிக்கைகள் வைத்திருக்கப்படுவதற்கு அதன்சார்பில் பேணப்படும் புத்தகங்களில் பதிவீடு செய்யப்படச் செய்வித்தல் வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளின் நிகழ்ச்சிக்குறிப்புக்கள் செயலாளரினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(9) அவ்வாறு கையொப்பமிடப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்கள், அத்தகைய நிகழ்ச்சிக் குறிப்புக்களில் குறித்துரைக்கப் பட்ட கருமங்களின் முதற்தோற்றச் சான்றாதல் வேண்டும்.

(10) பேரவையின் செயல் அல்லது நடவடிக்கைமுறை எதுவும் பேரவையின் உறுப்பினர்களில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் பாதிப்பு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

(11) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, பேரவையானது பேரவையின் கூட்டங்கள் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

பேரவையின் விசேட கூட்டம்

**14.** பேரவையின் விசேட கூட்டமானது தலைவரின் சொந்த பிரேரணையின்மீது அல்லது செயலாளரினால் ஆக்கப்பட்ட எழுத்திலான வேண்டுகோளொன்றின்மீது பேரவையின் சார்பில் அதன் மொத்த உறுப்பினர்களின் மூன்றிலொன்றுக்கு குறையாத உறுப்பினர்களால் கூட்டப்படலாம்.

பேரவையின் தலைவர்

**15.** பேரவையின் தலைவர், நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும். அவர் பேரவையின் மற்றும் நிறுவகத்தின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதல் வேண்டும். அவர், அவரது எவையேனும் கடமைகள் மற்றும் பணிகளை பிரதித் தலைவருக்கு கையளிக்கலாம்.

பேரவையின் செயலாளர்

**16.** (1) பேரவையின் செயலாளர்-

(அ) நிறுவகத்தின் சார்பில் எல்லாக் கடிதத் தொடர்புகளையும் கொண்டு நடாத்துதல் வேண்டும்;

(ஆ) பேரவையின் மற்றும் நிறுவகத்தின் எல்லாக் கூட்டங்களினதும் நிகழ்ச்சிக் குறிப்புக்களை வைத்திருத்தல் வேண்டும்;

(இ) பேரவையின் மற்றும் நிறுவகத்தின் கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களை அனுப்பி வைத்தல் வேண்டும்;

(ஈ) பேரவையின் வருடாந்த அறிக்கைகளை தயாரித்தல் வேண்டும்;

(உ) நிறுவகத்தின் சொத்துக்கள், மற்றும் நிறுவகத்தின் உறுப் பாண்மை இடாப்பு என்பவற்றை பேணுதலும் முகாமைசெய்தலும் வேண்டும்; அத்துடன்

(ஊ) பேரவையினால் அவருக்கு குறித்தளிக்கப் படக்கூடிய அத்தகைய வேறு எல்லாக் கடமைகளையும் புரிதல் வேண்டும்.

(2) பேரவையின் செயலாளரானவர் உதவிச் செயலாளர் அல்லது பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப் பட்டவாறாக பேரவையின் வேறு எவரேனும் உறுப்பினருக்கு எவையேனும் தனது கடமைகளை மற்றும் பணிகளை கையளிக்கலாம்.

பேரவையின் பொருளாளர்

**17.** பேரவையின் பொருளாளர்-

(அ) நிறுவகத்துக்கு வருமதியாகவுள்ள நிதிகளை சேகரிப்பதற்கு பொறுப்புடையோராதல் வேண்டும்;

(ஆ) நிறுவகத்தினது பணங்களின் சரியான கணக்குகளைப் பேணுதல் வேண்டும்;

(இ) பேரவையால் அவருக்கு குறித்தளிக்கப் பட்டவாறாக, நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காகவும் நிறுவகத்தின் நிதிசார் அலுவல்கள் தொடர்பான அத்தகைய வேறு கடமைகளை புரிவதற்காகவும் நிறுவகத்தின் நிதி நிலைமைமீதான மாதாந்த கூற்றை பேரவைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

பேரவையின் குழுக்கள்

**18.** (1) பேரவையானது, காலத்துக்குக் காலம், பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான ஏதேனும் நோக்கத்துக்காக குழுக்களை நியமிக்கலாமென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு குழுவுக்கும் அவற்றிற்கான கடமைகள் மற்றும் பணிகளை குறித்தளித்தலும் வேண்டும் மற்றும் அத்தகைய குழுக்களை பின்வரும் குழுக்களை உள்ளடக்கியிருத்தலும் வேண்டும்-

(அ) உறுப்பாண்மைக் குழு;

(ஆ) கொள்கை மதியுரை மற்றும் அரசியலமைப்புக் குழு;

(இ) உயர்தொழில்சார் நடத்தை மற்றும் செயன்முறைக் குழு;

(ஈ) உயர்தொழில்சார் விருத்தி மற்றும் வெளியீட்டுக் குழு;

(உ) ஒழுக்காற்றுக் குழு; அத்துடன்

(ஊ) காலத்துக்குக்காலம், பேரவையினால் தீர்மானிக்கக்கூடியவாறாக, வேறு ஏதேனும் நோக்கத்துக்கான வேறு ஏதேனும் குழு.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் ஒவ்வொரு குழுவும் ஆகக்குறைந்தது பேரவையின் உறுப்பினரொரு வரைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உறுப்பினர் குழுவின் தவிசாளராக இருத்தலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், நிறுவகத்தின் தலைவர், (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) எனும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்படும் குழுக்களின் தவிசாளராக இருத்தல் வேண்டும்.

(3) குறிப்பிட்ட குழுவொன்றுக்கு பேரவையின் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றவிடத்து, பேரவையானது அத்தகைய உறுப்பினர்களிலிருந்து ஒருவரை அத்தகைய குழுவின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு குழுவினதும் அமைப்பு, தத்துவங்கள் மற்றும் பணிகள் என்பன இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(5) தவிசாளர், அவர் எந்தக் குழுவின் உறுப்பினராக வுள்ளாரோ அந்தக் குழுவின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமைதாங்குதல் வேண்டுமென்பதுடன் தவிசாளர் சமுகமாக இல்லாதபோது, சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குவதற்கு தவிசாளராக அவர்களிலிருந்து ஆளொருவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(6) பேரவையினால் வழங்கப்படக்கூடியவாறாக அத்தகைய ஏதேனும் பணிப்புக்கமைவாக, குழுவொன்று அது பொருத்தமானதாகக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில், அதன் சொந்த நடவடிக்கைமுறையை ஒழுங்கு படுத்தலாம் என்பதுடன் அதன் தொழிலை நடாத்தலாம்.

பேரவையின் தத்துவங்களை கையளித்தல்

**19.** (1) பேரவை எழுத்திலும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாகவும் அதன் எவையேனும் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எவற்றையும் நிறுவகத்தின் தலைவர் அல்லது நிறுவகத்தின் பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் அலுவலர் அல்லது ஊழியருக்கு கையளிக்கலாமென்பதுடன் தலைவர் அல்லது அத்தகைய எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் பேரவையின் பெயரிலும் அதன் சார்பிலும் அத்தகைய தத்துவம், கடமை அல்லது பணியை பிரயோகித்தலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) பேரவையானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணியை பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாமென்பதுடன் அத்தகைய ஏதேனும் கையளிப்பை எந்நேரத்திலும் இல்லாதொழிக்கலாம்.

நிறுவகத்தின் இலச்சினை

**20.** (1) நிறுவகத்தின் இலச்சினையானது, பேரவையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன் முன்னதாகப் பெறப்பட்ட பேரவையின் அதிகாரத்துடனன்றியும் செயலாளர் மற்றும் எழுத்தில் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறாக பேரவையின் அத்தகைய வேறு உறுப்பினர் முன்னிலை யிலன்றியும் அத்தகையதுமான ஏதேனும் சாசனத்தில் பொறிக்கப்படுதலும் ஆகாது மற்றும் அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக பெயரை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) நிறுவகமானது, நிறுவகத்தின் இலச்சினை எந்த சாதனங்களில் அல்லது ஆவணங்களில் பொறிக்கப் பட்டுள்ளதோ அந்த சாதனங்கள் அல்லது ஆவணங்கள் பற்றிய இடாப்பொன்றை வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

நிறுவகத்தின் வருடாந்த பொதுக் கூட்டங்கள்

**21.** (1) நிறுவகத்தின் பொதுக் கூட்டமொன்று வருடாந்தம் நடத்தப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண், நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின் ஐந்தில் இரண்டாக இருத்தல் வேண்டும்.

(3) நிறுவகத்தின் அத்தகைய வருடாந்த பொதுக் கூட்டத்தில்-

(அ) பேரவையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுதல் வேண்டும்;

(ஆ) பேரவையின் வருடாந்த அறிக்கைகள் மற்றும் முற்போந்த நிதியாண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் உறுப்பினர்களின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்;

(இ) பேரவையினால் தீர்மானிக்கப்பட்ட வேறு ஏதேனும் அலுவல்கள் அல்லது வருடாந்த பொதுக் கூட்டத்தில் கலந்தாராய்வதற்காக எழுத்தில் பேரவையின் அறிவித்தலுக்காக கொண்டுவரப்பட்ட ஏதேனும் கருமம், பேரவையின் ஏழு உறுப்பினர்களுக்கு குறையாத வர்களால் கலந்தாராயப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) நிறுவகத்தின் உள்ளக கணக்காய்வாளர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) (அ) வருடாந்த பொதுக் கூட்டத்தின் அறிவித்தலானது, கூட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கூட்டத்தின் தேதி, நேரம் மற்றும் இடம் மற்றும் அக்கூட்டத்தில் கவனத்திற்கொள்ளப்படும் அலுவல்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

(ஆ) அத்தகைய அறிவித்தலானது, அத்தகைய கூட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு பிந்தாத தேதிக்குமுன்னர், உறுப்பினர் ஒவ்வொருவரினதும் வதிவிட முகவரிக்கு அல்லது இலத்திரனியல் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படுதல்

வேண்டுமென்பதுடன் இலங்கையில் பரந்தளவில் புழக்கத்திலுள்ள நாளாந்த செய்தித்தாளொன்றில் வெளியிடப் படுதலும் வேண்டும்.

(5) கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள், வருடாந்த பொதுக் கூட்டத்திலும் பேரவையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தலின் போதும் எடுக்கப்படும் ஏதேனும் கருமம் தொடர்பிலோ அல்லது எவையேனும் முடிபுகள் தொடர்பிலோ வாக்களிப்பதற்கு தகவுடையோராதல் வேண்டும்.

(6) கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்கள், வருடாந்த பொதுக் கூட்டத்தில் சமுகமளிப்பதற்கும் பங்குபற்றுவதற்கும் உரித்துடையோராதல் வேண்டும். ஆனால், வருடாந்த பொதுக் கூட்டத்திலும் பேரவையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தலின் போதும் எடுக்கப்படும் ஏதேனும் கருமம் தொடர்பிலோ அல்லது எவையேனும் முடிபுகள் தொடர்பிலோ வாக்களிப்பதற்கு உரித்துடையோராதல் ஆகாது.

**நிறுவகத்தின் விசேட பொதுக் கூட்டம்**

**22.** (1) நிறுவகத்தின் விசேட பொதுக் கூட்டமானது, பேரவையின் முன்னங்கீகாரத்துடன் விசேட நோக்கமொன்றுக்காக நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) விசேட பொதுக் கூட்டமொன்றின் கூட்டநடப்பெண், வாக்களிப்பதற்கு தகுதியுடையோராகவுள்ள நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின் ஐந்தில் இரண்டாக இருத்தல் வேண்டும்.

(3) (அ) விசேட பொதுக் கூட்டமொன்றிற்கான அறிவித்தலானது, கூட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கூட்டத்தின் தேதி, நேரம் மற்றும் இடம் என்பவற்றுடன் கூட்டத்தில் கவனத்திற்கொள்ளப்படவேண்டிய விசேட கருமம் என்பவற்றையும் உள்ளடக்கியிருத்தலும் வேண்டும்.

(ஆ) அத்தகைய அறிவித்தலானது, அத்தகைய கூட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் இரண்டு வாரங்களுக்கு பிந்தாமல், உறுப்பினர் ஒவ்வொருவரினதும் கடைசியாக அறியப்பட்ட வதிவிட முகவரிக்கும், இலத்திரனியல் மின்னஞ்சல் முகவரிக்கும் தபால்மூலம் அல்லது இலத்திரனியல் மின்னஞ்சல்மூலம் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் இலங்கையில் பரந்தளவில் புழக்கத்திலுள்ள நாளாந்த செய்தித்தாளில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் நிறுவகத்தின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுப்பப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதல்லாத வேறு எதுவும் அத்தகைய அறிவித்தல் எந்த விசேட கூட்டம் தொடர்பானதோ அந்த விசேட கூட்டத்தில் கவனத்தில் எடுக்கப்படுதல் ஆகாது.

நிறுவகத்தின் பணியாட் டொகுதி

**23.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, நிறுவகம் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை வினைத்திறனுடன் பிரயோகிப்பதற்கு, நிறைவேற்றுவதற்கு மற்றும் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறாக நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு அத்தகைய அலுவலர்களையும் ஊழியர்களையும் தொழிலுக்கமர்த்தலாம் அல்லது நியமிக்கலாம்.

(2) பேரவை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்மீது ஒழுக்காற்றுக்கட்டுப்பாட்டை பிரயோகிப்பதற்கும் அவர்களை பதவியிலிருந்து நீக்குவதற்கும்;

(ஆ) நிறுவகத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் சேவை பற்றிய நியதிகள் மற்றும் நிபந்தனைகளை தீர்மானிப்பதற்கும்; அத்துடன்

(இ) எவ்வீதங்களில் அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஊதியமளிக்கப்படவேண்டுமோ அவ்வீதங்களை நிர்ணயிப்பதற்கு.

(3) நிறுவகத்தின் எல்லா ஊழியர்களும், ஊழியத்தின் கடமைகளைத் தொடங்கிய ஒரு மாதத்தினுள், அவர்களின் நெருங்கிய உறவினர்கள் அல்லது எந்தக் கரிசனைகளில் அத்தகைய ஊழியர் கணிசமானளவு அக்கறை ஒன்றை கொண்டுள்ளனரோ அந்தக் கரிசனைகள் உள்ளடங்கலாக, நிறுவகத்தின் அலுவல்கள் மற்றும் கொடுக்கல்வாங்கல்களுக்கான அவர்களின் தனிப்பட்ட நேரடியான அல்லது நேரடியானதல்லாத அக்கறைகளை நிறுவகத்திற்கு எழுத்தில் வெளிப்படுத்தல் வேண்டும்.

நிறுவகத்தின் நிதியம்

**24.** (1) நிறுவகமானது, (இதனகத்துப்பின்னர் “நிதியம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்-

(அ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தின் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இலங்கையினுள்ளாயினும்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினும்சரி எத்தகையவுமான ஏதேனும் மூலத்திலிருந்து வருமானமாக, கட்டணமாக, விதிப்பனவுகளாக, மானியக்கொடைகளாக, கொடைகளாக அல்லது நன்கொடைகளாக நிறுவகத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்-

(அ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தின் தத்துவங் களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்று வதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப் படுத்தக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்பட தேவைப் படுத்தக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

கணக்குகளின் கணக்காய்வு

**25.** (1) நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) நிறுவகம், அதன் வருமானமும் செலவினமும் சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் நிறுவகத்தின் வேறு எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) நிறுவகத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளரால் ஆண்டு தோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தகைமைபெற்ற கணக்காய்வாளரால் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது பின்வருமாறு பொருள்படும்-

(அ) இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட கணக்காளரொருவராக செயலாற்றுவதற்கான சான்றிதழொன்றை உடைமையில் கொண்டுள்ள வருமான தனியாளொருவர்; அல்லது

(ஆ) இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட கணக்காளரொருவராக செயலாற்றுவதற்கான சான்றிதழை உடைமையில் கொண்டுள்ளதுமான கணக்காளர் குழுமமொன்றும் அதன் வதிவுள்ள பங்காளர்கள் ஒவ்வொருவரும்.

நிறுவகமானது ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கருத்துக்குட்பட்ட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாக கருதப்படுதல்

**26.** நிறுவகமானது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

உயர்தொழில்சார் நடத்தைக் கோவை

**27.** (1) நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கு ஏற்புடையற்பாலதான உயர்தொழில்சார் நடத்தைக் கோவையானது, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஒரு ஆண்டினுள் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் என்ற வகையில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(2) உயர்தொழில்சார் நடத்தைக் கோவையில் குறித்துரைக்கப்பட்ட உயர்தொழில்சார் நியமங்களுக்கு முரணாக

செயலாற்றுகின்ற எவரேனும் உறுப்பினர், ஒழுக்காற்று விசாரணையொன்றுக்கு ஆளாகுதல் வேண்டுமென்பதுடன் 8 ஆம் பிரிவின்கீழ் உறுப்பாண்மையிலிருந்து தகைமையற்றவராகவும் ஆக்கப்படலாம்.

நிறுவகத்தின் விதிகள்

**28.** (1) பேரவையானது, காலத்துக்குக்காலம், நிறுவகத்தின் ஏதேனும் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அல்லது விசேட பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மையின்மூலம் எவ்விதிகளை ஆக்குவதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டதோ அவ் எல்லா விதிகள் தொடர்பிலும் அல்லது அவ்விதிகளுக்கான ஏதேனும் கருமம் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம். அத்தகைய விதிகள் ஆக்கப்படும்போது, அதேபோன்ற கூட்டத்தில், அதேபோன்ற முறையில் மாற்றப்படலாம், சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பேரவைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பேரவையானது பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவையேனும் கருமங்கள் தொடர்பிலும் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்கலாம்-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களின் ஒவ்வொரு தரங்களுக்கும் செலுத்தப்படற்பாலதான கட்டணம், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல், தரமுயர்த்தல், மீளப்பெறுதல், இடைநிறுத்தல், வெளியேற்றுதல் அல்லது இராஜினாமாச் செய்தல் என்பவற்றில் பின்பற்றவேண்டிய நடைமுறைகள்;

(ஆ) ஒழுக்காற்று நடவடிக்கைமுறைகள், உயர் தொழில்சார் நடத்தைக் கோவை ஏற்பாடுகளின் முறைப்பாடுகளைக் கையாளுதல் மற்றும் இணங்கியொழுகுதல்;

(இ) நிறுவகத்தின் பதவிதாங்குநர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் அத்துடன் அவர்களின் நியமனம், ஊதியம், பதவி முடிவுறுத்துகை மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்களை

நடாத்துதல் உள்ளடங்கலாக நிறுவகத்தினதும் பேரவையினதும் அதன் ஏதேனும் குழுவினதும் கூட்டங்களை கூட்டுவதற்கும் நடாத்துவதற்கும் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட மற்றும் கூட்டிணைக் கப்படாத உறுப்பாண்மையின் சேர்ப்பித் தலுக்கான நிறுவகத்தின் உறுப்பாண்மையின் வித்தியாசமான தரங்களுக்கான தகைமைகள், தகைமையீனங்கள் மற்றும் தகுதியானதாக கருதப்படுகின்றவாறான வேறு தகவுதிறன் கட்டளைக்கற்கள்;

(உ) முறையாக இடம்பெறும் உறுப்பாண்மையின் வகுதிகளிலிருந்தான உறுப்பினர்களின் இடை நிறுத்தலுக்கு, வெளியேற்றுகைக்கு அல்லது மீள்சேர்ப்பித்தலுக்கு தகுதியானதெனக் கருதக் கூடியவாறான வேறு தகவுதிறன் கட்டளைக் கற்கள்;

(ஊ) நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கு ஏற்புடை யற்பாலதான உயர்தொழில்சார் நடத்தைக் கோவை; அத்துடன்

(எ) நிறுவகத்தின் ஆதனத்தை நிருவகித்தல் மற்றும் முகாமை செய்தல் மற்றும் நிறுவகத்தின் அலுவல்களின் பொது முகாமைத்துவம்.

(3) பேரவையினால் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

நிலையான சொத்து மற்றும் பெறுமான மதிப்பீட்டு நிறுவகத்தின் அடுத்துறுநர் ஒருவராக விருப்பதற்கு 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப் பட்ட நிறுவகம்

**29.** (1) இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கம்பெனியொன்றாக கூட்டிணைக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் “நிசொபெநி” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிலையான சொத்து மற்றும் பெறுமான மதிப்பீட்டு நிறுவகம், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுக்கு வரும் வகையில் ஒடுக்கப்படுதல் வேண்டும்.

(2) ஐயத்தைத் தவிர்ப்பதற்கு, இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிறுவகம், எல்லா நோக்கங்களுக்காகவும் நிசொபெநி க்கு அடுத்துறு நராகவிருப்பதற்கு கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் பின்வருமாறு அதற்கிணங்கியுள்ளது என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளில் நிசொபெநிக்கு சொந்தமாகவுள்ள எல்லா அசையும் மற்றும் அசையா ஆதனங்களையும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுக்கு வரும் வகையில், இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிறுவகத்துக்கு அளித்தல் வேண்டும்;

(ஆ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாயிருக்கும் நிசொபெநி இன் எல்லா தனிசுகளும் பொறுப்புக்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுக்கு வரும் வகையில் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிறுவகத்தின் தனிசுகளாகவும் பொறுப்புக்களாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(இ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளில் உளதாயிருக்கின்றதும் நிசொபெநி இன் நோக்கத்துக்காக செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுக்கு வரும் வகையில் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிறுவகத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் இருத்தல் வேண்டும்;

(ஈ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளில் முடிவுறாதிருக்கும் நிசொபெநி இனால் அல்லது நிசொபெநிக்கு எதிராக தொடுக்கப்பட்ட எல்லா வழக்குகளும் நடவடிக்கைமுறைகளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுக்கு வரும் வகையில் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்துக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் நடவடிக்கைமுறைகளாகவும் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(உ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று திருப்திப்படுத்தப்படாமல் இருக்கின்ற நிசொபெநி க்கு சாதகமாக அல்லது எதிராக ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் செய்யப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட எல்லாத் தீர்வைகளும் கட்டளைகளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுக்கு வரும் வகையில் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிறுவகத்துக்கு சாதகமாக அல்லது எதிராக செய்யப்பட்டதாகவோ அல்லது ஆக்கப்பட்டதாகவோ கருதப்படல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கவும் வலுவுறுத்தப்படலாம்.

(3) இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட கம்பெனிகளை ஒடுக்குதல் தொடர்பான ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் நிசொபெநி இன் ஒடுக்குதல் தொடர்பில் ஏற்புடைமையாதல் வேண்டும்.

**30.** இச்சட்டத்தில், வேறுவகையில் தேவைப்படுத்தி னாலொழிய - பொருள்கோடல்

"நிலையான சொத்து" என்பது, காணி மற்றும் காணியுடன் இணைக்கப்பட்ட நீர், மரங்கள், கனியங்கள், கட்டிடங்கள், மனைகள், வேலிகள், மற்றும் பாலங்கள் உள்ளடங்கலாக இயற்கையாயினுஞ்சரியான அல்லது மனித ஆக்கமாயினுஞ்சரியாக ஏதேனும் நிரந்தர மேம்படுத்தல்கள் எனப் பொருள்படும்;

"நிலையான சொத்து முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்புக்கள்" என்பது, வருமானம் உருவாக்கும் நிலையான சொத்தில் பிரதானமாக முதலீடு செய்யும் அல்லது முதலீடு செய்வதற்கு உத்தேசிக்கின்றதான கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கள் எனப் பொருள்படும்.

**31.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

# இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகம்

**அட்டவணை**

(5, 6 மற்றும் 9 ஆம் பிரிவுகள்)

## இலங்கையில் நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகத்தின் உறுப்பாண்மையினது வெவ்வேறு தரங்களுக்கு தேவைப்படும் தகைமைகளும் அனுபவங்களும்

**1. கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள்:**

1.1 சக உறுப்பினர்கள்:

(1) அடிப்படைத் தகைமைகள் :

சக உறுப்பினர் என்னும் தரத்துக்கு சேர்த்துக் கொள்வதற்கான ஒவ்வொரு அபேட்சகரும், கூட்டிணைக்கப்பட்ட உறுப்பாண்மையையும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கூட்டிணைக் கப்பட்ட உறுப்பாண்மையை பெற்றுக் கொண்டதன்பின்னர் நிலையான சொத்து துறையில் ஏழு வருட பணி அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) வேறு தகைமைகள்:

(அ) சக உறுப்பினர் என்னும் தரத்துக்கு சேர்த்துக்கொள்ளலானது, நிறுவகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களின் அங்கீகாரத்துக்கு அமைவாக இருத்தல் வேண்டும்;

(ஆ) சக உறுப்பினர் என்னும் தரத்துக்கு சேர்த்துக்கொள்வதற்கான ஒவ்வொரு அபேட்சகரும், நிறுவகத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் தொடர்ச்சியான உயர் தொழில்சார் அபிவிருத்தி (உதொஅ) நிகழ்ச்சித்திட்டங்களில் ஆகக்குறைந்தது மூன்றில் இரண்டிற்காவது சமுகமளித்தல் வேண்டும்.

1.2 உறுப்பினர்:

(1) அடிப்படைத் தகைமைகள் :

உறுப்பினர் என்னும் தரத்துக்கு சேர்த்துக்கொள்வதற்கான ஒவ்வொரு அபேட்சகரும், இணை உறுப்பாண்மையை

கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நிரலில் சேர்த்துக்கொள்ளப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினரொருவரின் நேரடி கண்காணிப் பின்கீழ் இருக்கும் இணை உறுப்பாண்மையை பெற்றுக்கொண்டதன்பின்னர் நிலையான சொத்து துறையில் இரண்டு வருட பணி அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) வேறு தகைமைகள் :

உறுப்பினர் தரத்துக்கு சேர்த்துக்கொள்வதற்கான ஒவ்வொரு அபேட்சகரும்-

(அ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பாண்மைக் கான பரீட்சையில் அல்லது வைவா குரலில் தேர்ச்சியடைதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நிறுவகத்தினால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் தொடர்ச்சியான உயர் தொழில்சார் அபிவிருத்தி (தொஉஅ) நிகழ்ச்சித்திட்டங்களில் ஆகக்குறைந்தது மூன்றில் இரண்டிற்காவது சமுகமளித்தல் வேண்டும்.

**2. கூட்டிணைக்கப்படா உறுப்பினர்கள்:**

2.1 இணை உறுப்பினர்கள் :

(1) கல்விசார் தகைமைகள் -

(அ) சொத்து முகாமைத்துவம் மற்றும் பெறுமான மதிப்பீடு விஞ்ஞான இளமானி (சிறப்பு) பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் சமமான பட்டம் மற்றும் பட்டம் பெற்றதன் பின்னர் நிலையான சொத்து துறை என்னும் விடயத்தில் ஆகக்குறைந்தது ஒரு வருட அனுபவம்; அல்லது

(ஆ) நிலையான சொத்து முகாமைத்துவம் மற்றும் பெறுமான மதிப்பீட்டில்

பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவொன்று அல்லது பட்டப்பின் பட்டமொன்று (முதுகலை) பெற்றுக்கொண்டதன் பின்னர் நிலையான சொத்து துறை என்னும் விடயத்தில் ஆகக்குறைந்தது இரண்டு வருட அனுபவமும் அத்துடன் நிறுவகத்தினால் நடாத்தப்படும் இணை உறுப்பாண்மைக்கான வைவா குரல் பரீட்சையில் தேர்ச்சியடைதலும் வேண்டும்.

(2) வேறு தகைமைகள் :

இந்நிறுவகத்தின் மாணவ உறுப்பினரொருவராக இருப்பது, கூடுதல் தகைமையொன்றானவாறாக கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும்.

2.2 மாணவ உறுப்பினர்:

(1) கல்விசார் தகைமைகள் :

(அ) சொத்து முகாமைத்துவம் மற்றும் பெறுமான மதிப்பீட்டு விஞ்ஞான இளமானி (சிறப்பு) பட்டம் பட்டம் பெறவிருக்கும் பல்கலைக்கழக மாணவரொருவராக இருத்தல் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் சமமான பட்டம்; அல்லது

(ஆ) நிலையான சொத்து முகாமைத்துவம் மற்றும் பெறுமான மதிப்பீட்டில் பட்டப்பின் டிப்ளோமாவின் அல்லது பட்டப்பின் பட்டம் (முதுகலை) இன் பதிவுசெய்யப்பட்ட மாணவரொருவராக இருத்தல்.

2.3 கௌரவ உறுப்பினர் :

(1) கௌரவ உறுப்பாண்மை அளித்தலுக்கான வழிகாட்டுநெறிகள்-

(அ) கௌரவ உறுப்பாண்மையானது, இலங்கையில் நிலையான சொத்து தொழிற்றுறை மற்றும் உயர்தொழில் சார் மிகத்திறம்வாய்ந்த சேவையை வழங்கியுள்ளவரான அத்தகைய ஆட்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்;

(ஆ) கௌரவ உறுப்பாண்மையானது, தனியா ளொருவருக்கு வாழ்நாள் காலத்துக்காக வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அளிக்கப்படுதலும் வேண்டும்;

(இ) கௌரவ உறுப்பினர்கள், நிறுவகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமொன்றில் சமுகமாயிருக்கும் மொத்த உறுப்பினர் களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குமூலம் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்;

(ஈ) கௌரவ உறுப்பினர் நியமத்தர்களின் தெரிவு நடவடிக்கைமுறையானது, நிறுவகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கவனத்துக்காக அது தொடர்பான விதப்புரைகளைச் செய்யும் உறுப்பாண்மைக் குழுவினாலும் பேரவையினாலும் நிலையான சொத்து துறைக்காக செய்யப்பட்ட மிகத்திறம்வாய்ந்த பங்களிப்புக்களின் பரிசோதனையினூடாக செய்யப்படுதல் வேண்டும்;

(உ) எதிர்காலத்தில் அவரின் பதவிநிலை, அனுபவம் அல்லது திறமை என்பவற்றின் காரணத்தால் நிறுவகத்தின் நோக்கங்களை மேம்படுத்துவதில் உதவுவதற்கான உளச்சார்பு மற்றும் திறன்;

(ஊ) பேரவையானது, பேரவையினால் எதிர்கால குறிப்பீட்டிற்கு சான்றான வாறாக பேணிக்காக்கப்பட வேண்டிய பெயர்குறித்து நியமனம் செய்யப்பட்டதினதும் அவ்வாளுக்கான கௌரவ உறுப்பாண்மையின் அளிப்பினதும் அத்தகைய பதிவுகளை பேணுதல் வேண்டும்;

(2) தேர்வுக் கட்டளைக்கல் :

நிறுவகத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் விதப்புரைகளைச் செய்வதற்கு முன்னர் பேரவையினால் பின்வரும் அம்சங்கள் சோதிக்கப்படுதல் வேண்டும்

(அ) இலங்கையில் நிலையான சொத்து கைத்தொழில் மற்றும் உயர்தொழில் துறையில் ஆகக்குறைந்தது பதினைந்து ஆண்டுகள் சேவை;

(ஆ) நிலையான சொத்து கைத்தொழில் மற்றும் உயர்தொழிலின் முன்னேற்றத்திற்கான நியமத்தரின் மிகத் திறம்வாய்ந்த பங்களிப்பு மற்றும் நிறுவகத்தை அல்லது இலங்கையை உயர்த்துவதற்காக தாராள பங்களிப்பு;

(இ) நிலையான சொத்து கைத்தொழில் மற்றும் உயர்தொழிலுக்கு அவர் எவ் உள்நாட்டு அல்லது சர்வதேச நிறுவனங்களில் அல்லது எத் தனியார் தொழிலாளரொருவராக பங்களிப்பைச் செய்தாரோ அவ் உள்நாட்டு அல்லது சர்வதேச நிறுவனங்களில் அல்லது அத்தனியார் தொழிலாளரொருவராக வகித்துள்ள பதவி மற்றும் சேவைகளின் ஆண்டுகள்;

(ஈ) நிலையான சொத்து கைத்தொழில் அல்லது நிறுவகம் அல்லது உயர் தொழிலுக்காக வழங்கப்பட்ட விதிவிலக்கான சேவைகள் மற்றும் அதிவிசேட சேவை மீதான தாக்கத்தை விளக்குதல்.

(3) நடவடிக்கைமுறை :

(அ) நிறுவகமானது கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர் மூலமான முன்மொழிவுடனும் பேரவையின் சக உறுப்பினரொருவரின் மூலமான வழிமொழிவுடனும் சேர்த்து பிரசித்த நொத்தாரிசினால் அவசியமான சான்றுப்படுத்தல்களுடன் அனுபவங்கள், பங்களிப்புக்கள் மற்றும் அக்கறையின் விபரங்களுடன் சேர்த்து

அதன்கண் அக்கறையுள்ள எவரேனும் திறத்தவரிடம் அல்லது இலத்திரனியல் ஊடகம் என்பவற்றினூடாக கௌரவ உறுப்பாண்மைக்கு விண்ணப்பங்களைக் கோருதல் வேண்டும்;

(ஆ) நிறுவகத்தின் பேரவையினால் பாரதூரமாக கவனத்திற்கொள்ளப்படவேண்டிய எவ ரேனும் ஆளுக்கான கௌரவ உறுப்பாண்மை அளிப்புக்கான பெயர் குறித்த நியமனங்களின் தொடக்க நடபடி மற்றும் அத்தகைய விதப்புரையொன்று நிறுவகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தின்முன்னர் இடப்படுவதற்கு பேரவையின் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு வாக்குகளின்மூலம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்;

(இ) கௌரவ உறுப்பாண்மைக்கான விதந்துரைக்கப்பட்ட பெயர்குறித்த நியமனங்களை முன்மொழிபவரினால் முன்வைக்கப்படுதல், அதன்பின்னர் கவனத்துட்கொள்வதற்காகவும் ஆண் டிறுதி பொதுக் கூட்டத்தில் நிறுவகத்தின் பொது உறுப்பாண்மையினால் அங்கீ காரத்துக்காகவும் சமுகமளித்துள்ள மொத்த உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்கு குறைவாகவுள்ளவிடத்து சாதகமாக இருத்தல் வேண்டும்;

(ஈ) ஒவ்வொரு பெயர்குறித்த நியமனமும், நிலையான சொத்து கைத்தொழில், உயர்தொழிலுக்கான, நிறுவகத்துக்கான அல்லது இலங்கைக்கான சேவைகள் மற்றும் பங்களிப்புக்களின் எழுத்தாக்கத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(உ) கௌரவ உறுப்பினர்களின் எண்ணிக்கை யானது, தொடக்க மூன்று ஆண்டுகளில் ஆகக்கூடியது ஐந்தாகவும், அதன் பின்னரான ஒவ்வொரு ஆண்டும் இரண்டு தனியாட்களுக்கும் வரையறுக்கப் பட்டிருத்தல் வேண்டும்;

(ஊ) நிறுவகத்தின் கௌரவ உறுப் பாண்மையை பெற்றுக்கொள்வதற்கு விரும்பும் இலங்கையிலுள்ள

மதிப்புமிக்க நிலையான சொத்து அபிவிருத்தியாளர்கள் அல்லது முதலீட்டாளர்களுக்காக அனுமதியளிக் கப்பட வேண்டுமென கௌரவ உறுப்பாண்மை முன் மொழியப்படும் பட்சத்தில், நிறுவகத்தின் மூலம் அவர்களின் அங்கீகாரம் மற்றும் மதிப்பு என்பவற்றின் நோக்கத்துக் காக பேரவையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறாக அத்தகைய உறுப் பாண்மையானது ஆண்டினிறுதி அல்லது வாழ்நாள் கட்டணங்களுக்கமைவாக அளிக்கப்படலாம்;

(எ) நிறுவகமானது, நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின் வகுதியின்கீழ் கவனத்திற் கொள்ளப் படாத உறுப்பினர் என்றவாறாக உயர்தொழில்சார் செயன் முறைகளில் அல்லது வாக்களிக்கும் தத்துவத்தில் ஈடுபடுவதற்கு கௌரவ உறுப்பினர்களை அனுமதித்தலோ அல்லது அதிகார மளித்தலோ ஆகாது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.